004014 **சுருக்கம்**

பணியமைப்பு - சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை - கோவை அவிநாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர் கல்வி நிறுவனத்தால் வழங்கப்படும் வேதியியல் (Chemistry) மற்றும் இயற்பியல் (Physics) ஆகியவற்றை துணைப் பாடங்களாகக் கொண்ட பி.எஸ்.சி. பொது மனையியல் பட்டப் படிப்பினை பள்ளி உதவியாளர் பதவி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியான பி.எஸ்.சி. மனையியல் பட்டப் படிப்பிற்கு இணையாக கருதி ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.1) துறை

அரசாணை (நிலை) எண். 145

நாள் 08.07.2010
ஆனி 24 திருவள்ளுவர் ஆண்டு 2041
படிக்கப்பட்டது

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய நேர்முகக் கடித எண்.162/விமஅது-ஊ1/1999, நாள் 06.05.2008.

---

**ஆணை:-**

கோவை அவிநாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர்கல்வி நிறுவனத்தால் வழங்கப்படும் வேதியியல் (Chemistry) மற்றும் இயற்பியல் (Physics) ஆகியவற்றை துணைப்பாடங்களாகக் கொண்ட பி.எஸ்.சி. பொது மனையியல் (B.Sc., General Home Science) பட்டப்படிப்பினை பள்ளி உதவியாளர் (School Assistants) பதவி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியான பி.எஸ்.சி. மனையியல் (B.Sc., Home Science) பட்டப்படிப்பிற்கு இணையாக கருதுதல் தொடர்பாக, Principal, Lady Wellington Institute of Advanced Study in Education, Chennai-5, Principal, Institute of Advanced study in Education, Chennai-15, Madras University மற்றும் சமூக நல இயக்குநர், சென்னை–5, ஆகியோர்களிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டு 07.04.2005 அன்று நடைபெற்ற இணைக்கல்வி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் கலந்தாய்வு குழுக்கூட்டத்தில் பரிசீலனைக்கு வைக்கப்பட்டது என்றும் தீவிர பரிசீலனைக்குப்பின் குழு "கோவை அவிநாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர்கல்விக்கழகம் நடத்தும் இயற்பியல் மற்றும் வேதியியல் ஆகிய பாடங்களைத் துணைப் பாடங்களாகக் கொண்டு (Physics and Chemistry as Ancillaries) நடத்தப்படும் பி.ஸ்.சி. பொது மனையியல் (B.Sc., General Home Science) பட்டப்படிப்பை பள்ளி உதவியாளர் பதவி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியான பி.எஸ்.சி., மனையியல் (B.Sc., Home Science) பட்டத்திற்கு இணையாக கருதுதல்" எனும் பொருள் மீது

" Recommended" என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்று செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்கள் தெரிவித்து, அக்குழுவின் பரிந்துரையின் மீது தகுந்த ஆணை வழங்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். இணைக் கல்வி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் பரிந்துரையினை கவனமாகப் பரிசீலித்த அரசு, மேற்காணும் நிலையில், கோவை அவிநாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர் கல்வி நிறுவனத்தால் வழங்கப்படும், வேதியியல் (Chemistry) மற்றும் இயற்பியல் (Physics) ஆகியவற்றை துணைப்பாடங்களாகக் கொண்ட பி.எஸ்.சி. பொது மனையியல் பட்டப் படிப்பினை பள்ளி உதவியாளர் பதவி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியான பி.எஸ்.சி. மனையியல் பட்டப்படிப்பிற்கு இணையாக கருதி அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா. இராம மோகன ராவ்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை -6.
அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும்
உயர் கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் -43.
சமூக நல ஆணையர், சென்னை-5.
சிறப்புச் செயலாளர்/சிறப்பு ஆணையர்,
குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள், சென்னை-113.

நகல்

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை,
சென்னை-9.
உயர்கல்வித்துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வித்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரிப் படிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
22/7/10